சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.188/2018

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – வீரக்குமார் (Pw2) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காரியாபட்டி தாலுகா கரிசல்குளம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் கோரிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். அழைப்பாணையில் கோரிய ஆவணங்கள் ( 4 பக்கங்கள் மற்றும் ஒரு இணைப்பு கடிதம்) சா.சா.ஆ 1 ஆக தாக்கல் செய்கிறேன். தாவா சொத்து முதலில் விஜயராகவன் என்பவர் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது. மேற்படி விஜயராகவன் உரிமையாளர் என்ற பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது. அதன் பின்னர் பாலகிருஷ்ணன் மகள் கமலம்மாள் என்பவர் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது. கமலம்மாள் பெயரில் இருந்து தியாகராஜன் மகன் பிரபாகரன் என்பவர் பெயரில் தாக்கலாகியுள்ளது. விஜயராகவன் பெயரில் இருந்து கமலம்மாள் பெயருக்கு 30.12.1999 ல் பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது. கமலம்மாள் பெயரில் இருந்து பிரபாகரன் பெயருக்கு 4166/2013 நாள் 23.12.2013 ன் படி பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. UDR 1985 ல் வந்தது. மேற்படி திட்டம் வந்த பின்னர் தான் பிரபாகரன் பெயருக்கு பட்டா

மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**<u>1, 2, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நடப்பில் பிரபாகரன் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். பிரபாகரன் பெயரில் பட்டா மாறுதல் கிரைய ஆவணத்தின் பேரில் மாறியுள்ளது என்றும், அது பற்றி குறிப்புகள் எதுவும் உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண். 60/15. மேற்படி சொத்து பூமியில் ஒரே சேகரமாக உள்ளது. வருவாய் துறையில் ஏற்படும் பசலிகளுக்கு பிரபாகரன் பெயரில் மற்றும் அதற்கு முன்பு கமலம்மாள் பெயரிலும் குறிப்புகள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக வருவாய் துறையில் தரப்பினர்களின் கோரிக்கைகளின் படியோ அல்லது முன் ஆவணங்களை சரிபார்த்து பட்டா மாறுதல் செய்யப்படும் என்றால் சரிதான். அனுபவம் சம்பந்தமாகவும் விசாரிப்போம் என்றால் சரிதான். பட்டா மாறுதல் செய்யும் போது சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அறிவிப்பு அனுப்புவது முறை தான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் பட்டா மாறுதல் தரப்பினர்களின் கோரிக்கையின் படியும், முறையான ஆவணங்களின் அடிப்படையிலும் தான் ஏற்பட்டியிருக்கும் என்றும், அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும் சொன்னால் சரிதான்.

**<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.